**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.98/2025** |
| Deposition of witness | : | P.W.5 |
| Name | : | ரஞ்சித் |
| Father's /Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | ஓலையாமங்கலம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 27 |
| Occupation | : | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day of October 2025.

A1 , A2, A4, A5 present. A3 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஓலையாமங்கலத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். எதிரிகள் விக்னேஷ், மகேஷ், முத்துராமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலீசார் எதுவும் விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27.05.2024 ம் தேதி காலை 10.30 மணியளவில் இவ்வழக்கின் சம்பவயிடம் அருகே நான் நின்றுகொண்டிருந்த போது குடவாசல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை என்முன்னிலையில் பார்வையிட்டார்கள் என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதே நாள் காலை 10.40 மணியளவில் சம்பவயிடத்தில் கிடந்த சுமார் 3 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை

ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு நான் சாட்சியாக கையொப்பங்கள் செய்தேன் என்றும், போலீசார் என்னை சாட்சியாக விசாரித்தார்கள் என்றும் போலீசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது இவ்வழக்கில் சம்மந்தபட்ட 1, 2 மற்றும் 4 வதுஎதிரியை எனக்கு தெரியும் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நானும் அ.சா.1 ம் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 21.05.2024 ம் தேதி எங்கள் ஊரில் ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்து 1, 2 எதிரிகளின் சகோதரி கார்த்திகாவை அ.சா.1 ம் மணிகண்டன் என்பவரும் பிரச்சனை செய்ததால் கூட்டப்பட்டது என்றால் சரிதான். 1, 2 எதிரிகளின் குடும்பத்தினர் மேற்படி பிரச்சனை சம்மந்தமாக குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்தில் பெண் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதால் கோர்ட் வழக்குகள் எதுவும் வேண்டாம் என்று பேசி எதிரிகள் தரப்பில் புகாரை வாபஸ் பெற சொன்னார்கள் என்றால் சரிதான். அதன்படி 1, 2 எதிரிகள் புகாரினை வாபஸ் பெற்றார்கள் என்றால் சரிதான். அ.சா.1 குடும்பத்தினரை பெண் பிரச்சனை என்பதால் ஊரில் கண்டித்தார்கள் என்றால் சரிதான். 20.05.2024 ம் தேதியில் கார்த்திகாவிடம் பிரச்சனை செய்தவர்களை அ.சா.1 மற்றும் மணிகண்டனையும் ஊர்க்காரர்கள் தான் விரட்டி விட்டார்கள் என்றால் சரிதான். 20.05.2024 அன்று காவடி எடுத்தார்கள் போலீசார்கள் பாதுகாப்புக்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.14 11:19:16 +0530

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal.